# S.I.R.க்கு எதிராக அணி திரண்ட ‘இந்தியா’ கூட்டணியினர்!



திருச்சியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே மத்திய – வடக்கு – தெற்கு மாவட்டம் சார்பில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்ட மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர். திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில், மாநகரச் செயலாளர் அன்பழகன் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் காதர் மொய்தீன்,திருச்சிநாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றினர்கள்.




SIR என்கிற சிறப்பு வாக்காளர் சீர்திருத்த சட்டத்தை எதிர்த்து ஈரோடு மாவட்டம் ஒன்றுபட்ட திமுக கழகத்தின் சார்பாக ஈரோடு வடக்கு தெற்கு மத்திய மாவட்ட கழகத்தின் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என். நல்லசிவம் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் கே இ.பிரகாஷ் எம்.பி. கலந்து கொண்டு தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள ”SIR பற்றி விளக்க உரையாற்றி கண்டனத்தை பதிவு செய்தார். இந்நிகழ்ச்சியில் வி சி. சந்திரகுமார் எம்எல்ஏ, மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என் டி. வெங்கடாசலம் மாநில நிர்வாகிகள் ம. கந்தசாமி, எஸ் எல் டி ப. சச்சிதானந்தம், குறிஞ்சி என். சிவக்குமார், சிந்து ரவிச்சந்திரன், மாசு ராதாகிருஷ்ணன், சரவணன், வீரமணி, மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்ல பொன்னி, கா சின்னையன், ப க பழனிச்சாமி, மேயர் மேயர் சு. நாகரத்தினம், துணை மையம் வி. செல்வராஜ், மாநகர கழக செயலாளர் மு. சுப்ரமணியன் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் பங்கேற்றனர்.




மயிலாடுதுறையில் தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகள் சார்பில் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.) கொண்டுவந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து தலைமை தபால் நிலையம் எதிரே மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா சிலை அருகில் திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் வரவேற்புரையில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




சேலம் மாவட்டம் கோட்டை மைதானத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பு தீவிர சீராய்வு S.I.R. –யைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., தேர்தல் பொறுப்பாளர் ஈ.ஜி.சுகவனம், ஜி.கே.சுபாஷ், பா.ரகுபதி, டாக்டர். ஏ.கே.தருண், சின்னதுரை, ஏ.ஏ.ஆறுமுகம் மு.ரா.கருணாநிதி, உமாராணி, ரேகாபிரியதர்ஷினி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாகையில் தி.மு.க உள்ளிட்ட அனைத்துக் கட்சிகள் சார்பில் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.) கொண்டுவந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து நாகை அவுரித்திடலில் மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கொண்டு வந்துள்ள, இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து, ஆர்ப்பாட்டம், கரூர் மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலுடன், கரூர் தலைமை தபால் நிலையம் முன்பு மாவட்ட அவைத்தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ. க.சிவகாமசுந்தரி உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தோழர்கள் ஆயிரக்கணக்கில் திரளாக கலந்து கொண்டனர்.



திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் தாராபுரம், அண்ணா சிலை அருகில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகள் சார்பில் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.